**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 43/2021**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காசிராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆழ்வார் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | பட்டன்கல்லூர் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 25th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர ஆயுதப்படையில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக்காவலராக பணியில் இருந்தபோது, 16.12.2016 ம் தேதி, காலை 10.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி.உமாமகேஸ்வரி தலைமையில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் மற்றும் காவலர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது, ஆலங்குளம் பஸ்ஸ்டாண்ட் பின்புறம் எதிரி முருகன் என்பவர் கையில் 180 மிலி பிடிக்கக்கூடிய ஓல்டு செப் டீலக்ஸ் பிராந்தி எண்ணம் –11 வைத்திருந்தார். நாங்கள் விசாரிக்கும் போது முன்னுக்கு முன் முரணாக பேசினார். எதிரியை கைது செய்து விசாரிக்கும்போது, அவர் வைத்திருந்த பிராந்தி பாட்டில்களின் மூடி திறந்திருந்தது. பிராந்தி பாட்டிலை திறந்து, நுகர்ந்து பார்த்தபோது, அதிலிருந்து வித்தியாசமான வாடை வந்தது.

அந்த மதுபாட்டில்களை அத்தாட்சி பிறப்பித்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்திட முன்வராததினால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 அத்தாட்சியிலுள்ள மூன்றாவது கையொப்பம் என்னுடையது தான். பின்னர், எதிரியையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற எண்.419/2016, சட்டப்பிரிவுகள் 4(1-A) TNP Act-ன் படி வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** –

ஆலங்குளம் பஸ்ஸ்டாண்டானது காலை 10.00 மணிக்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பஸ்ஸ்டாண்ட்டில் உள்ள யாரையும் சாட்சியாக இருக்க அழைக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை சம்பவயிடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். நானும், மற்ற சாட்சிகளும் சம்பவயிடத்தில் வைத்து தான் அத்தாட்சியில் கையெழுத்து செய்தோம்.

சார்பு ஆய்வாளர் அத்தாட்சியை கைப்பட எழுதினார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்பதினால் தான், பொதுமக்கள் யாரையும் நாங்கள் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.26 13:46:03 +0530